# 2 பத்தி எழுத்துக்கள்

**கவிக்கோ அப்துல் ரஹ்மான்**

தமிழகத்தைச் சேர்ந்த இவர் கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கவிஞர், பத்தியாளர், ஆய்வாளர், பேச்சாளர் என்று விரிவடையும் இவரது ஆளுமையின் அறுவடைகளாக முட்டை வாசிகள், சொந்தச் சிறைகள், அவளுக்கு நிலாவென்று பெயர் முதலான நூல்களையும், புதுக்கவிதையில் குறியீடு என்ற ஆய்வு நூலையும், பால்வீதி, சுட்டுவிரல் முதலான கவிதைத் தொகுப்புகளையும் கூறலாம். ஹைகூ, கஸல் முதலான பிறமொழிக் கவிதை வடிவங்களையும் தமிழில் பரப்பியவர்.



பத்தி எழுத்து என்பது பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் தமிழுக்குக் கிடைத்த புதியதொரு வடிவமாகும். கட்டுரைக்குரிய மரபுகளை மீறி ஆக்கப்படும் இந்த வடிவம் ஒரு வகையில் படைப்பாக்கமாகவே அமைகிறது. இங்கு இடம்பெறும் இந்த இரண்டு பத்திகளும் எடுத்துக்கொண்ட விடயங்களைப் புதிய நோக்கில், புதிய நடையில், புதிய பாணியில் விபரிக்கின்றன.

## அ. மரம் என்பது உயர்திணை

சாலையில் நடக்கிறேன். இருபுறமும் மரங்கள். மலர் சொரிந்து என் பயணத்தை ஆசீர்வதிக்கும் மரங்கள். வெயிலுக்குக் குடை பிடிக்கும் மரங்கள். நான் களைப்படையும் போதெல்லாம் தாய்ப் பாசத்தோடு தங்கள் மடியில் என்னை ஆசுவாசப்படுத்தும் மரங்கள்.

நன்றி என் கண்களில் சுரக்கிறது.

மனிதனின் வாழ்க்கைப் பாதையைப் பார்க்கிறேன். அங்கும் வரிசையாக மரங்கள்.

அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடைவண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்றுகோலாகி, இறந்த பிறகும் பாடையாகி சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து - மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்திற்குச் சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குக் கைகளாகி, அவன் சுவாசத்திற்காகக் காற்றைச் சலித்துக் கொடுத்து, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப்பிச்சைக் கேட்டு, - ஓ! மரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

சரித்திரச் சாலையைப் பார்க்கிறேன். அங்கும் மரங்கள்

அதோ! போதி மரங்கள்; பாவ வெயில் மறைக்கும் அறக் குடைகள்.

அதோ! காவல் மரங்கள்; ஊர்ப் பொது மன்ற மரங்கள்; பொருட்பாலின் அத்தாணி மண்டபங்கள்.

அதோ! வசந்த மரங்கள்; மன்மதனின் அம்பறாத் தூணிகள்; வாலிபங்கள் பள்ளியறைப் பாடம் கற்கும் பள்ளியறைகள் .

அதோ! கல்லால மரங்கள்; வீட்டு நெறிக்குக் கைகாட்டும் மரங்கள்.

மனிதனைப் பார்க்கிறேன். அவன் மரத்திலிருந்தே கோடரிக் காம்பு செய்து கொண்டிருக்கிறான். தருகின்ற தருக்களின் தயவில் வாழ்ந்தாலும் மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கிறான்.

மனிதனை 'மரமே' என்றால் கோபித்துக் கொள்கிறான். நானோ மரத்தை வச வாக்கியவனைக் கோபிக்கிறேன். மரம் என்பது வசவா?

மனிதன் மரமாக முடியுமா? மனிதனுக்கும் மரத்திற்கும் எவ்வளவு வேறுபாடுகள்!

மண் மனிதனுக்குப் புதை குழி; மரத்துக்கோ கருவறை.

மனிதன் தன்னை மண்ணின் மைந்தன் என்று வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறான். உண்மையில் மண்ணின் மைந்தர்கள் மரங்களே; மனிதர்கள் அல்லர்.

பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள். மனிதன் பிறந்த இடத்தைச் செலவு செய்கிறவன்.

மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்.

மரம் புழுதியில் பூக்களையும், கழிநீரில் கனிகளையும் செய்கிறது. மனிதன் பூக்களில் புழுதியையும், கனிகளில் கழிநீரையும் செய்கிறான்.

மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதாக்காதி. மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்.

மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான்.

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது; மனிதன் வலக் கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்கிக் கொள்கிறான்.

மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது; மனிதன் புழுதியிலேயே புரளுகிறான்.

மரமாகத்தான் முடியவில்லை; மரங்களைப் படைக்கவாவது மனிதனுக்குத் தெரிகிறதா?

இதோ! அவன் படைத்த மரங்கள்; தூக்கு மரங்கள், சிலுவை மரங்கள், கழு மரங்கள், கொடி மரங்கள். அத்தனையும் மாமிசப் பட்சிணி மரங்கள்; மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள்; வெயிலை விநியோகிக்கும் மரங்கள்.

இந்த அழகில் மனிதன் உயர்திணையாம்; மரம் அஃறிணையாம். சரிதானா?

**பொருளுணர் திறன் செயற்பாடு**

1. மரம் உயர்திணை என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணங்களை எழுதுக.
2. மரங்களுடன் மனிதனை ஒப்பிடுமாற்றிலுள்ள சிறப்புகளை விளக்குக.
3. இப்பத்தி எழுத்தாளர் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு கையாண்ட உத்திகளை எடுத்துக்காட்டுக.
4. ஆசிரியரின் மொழி நடை சிறப்புப் பற்றி உமது கருத்துக்களைத் தருக.

## ஆ. மென்மையே வாழும்

'வாழ்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும் (Survival of the fittest)' என்றார் டார்வின்.

ஆனால் சீன ஞானி கன்ஃபூஷியஸோ, ' மென்மையானவையே நீண்ட நாள் வாழும்' என்கிறார்.

கன்ஃபூஷியஸ் மரணப் படுக்கையில் இருந்தார்.

படுக்கையைச் சுற்றி அவருடைய சீடர்கள் கண்களில் நீரோடு நின்று கொண்டிருந்தனர்.

சீடர் ஒருவர் தழுதழுத்த குரலில்,'குருவே! கடைசியாக எங்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்' என்றார்.

கன்ஃபூஷியஸ் தம் வாயைத் திறந்து காட்டி, ' என் வாயில் என்ன தெரிகிறது, பார் என்றார்.

சீடர் வாய்க்குள் பார்த்துவிட்டு, 'நாக்கு தெரிகிறது' என்றார்.

‘பற்கள் இருக்கின்றனவா?’ என்று கேட்டார் கன்ஃபூஷியஸ்.

‘இல்லை’ என்றார் சீடர்.

‘இதில் இருந்து என்ன தெரிகிறது?’ என்று கேட்டார் கன்ஃபூஷியஸ்.

‘எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீங்களே சொல்லிவிடுங்கள்’ என்றார் சீடர்.

‘நாக்கு மென்மையானது. பல் வலிமையானது. நாக்கு நான் பிறந்ததிலிருந்து இருக்கிறது. பல் பிறகுதான் முளைத்தது. வயது முதிர முதிர என் பற்கள் விழுந்து விட்டன. நாக்கு அப்படியே இருகின்றது. நான் சாகும்வரை அப்படியே இருக்கும். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே நீங்கள் மென்மையானவர்களாக இருங்கள். நீண்ட நாள் வாழ்வீர்கள். இதுதான் உங்களுக்கு என் கடைசிச் செய்தி’ என்றார்.

அவர் ஆவி பிரிந்தது.

கன்ஃபூஷியஸின் பார்வை (Observation) அற்புதமானது.

அது இயற்கையின் ரகசியங்களுள் ஒன்றைப் பார்த்துவிட்டது.

மென்மையானது சீக்கிரம் அழிந்துவிடும். வன்மையானது அழியாது என்பதுதான் பொது நம்பிக்கை.

வயதானால் பற்கள் விழுந்துவிடுகின்றன.

அவை அப்படி விழுவதற்குக் காரணம் அவற்றின் வலிமையே.

நாக்கு அப்படி விழுவதில்லை. காரணம் அதன் மென்மை.

நீர் மென்மையானது என்று நினைக்கின்றோம்.

ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்துவிடுகிறது. வலிமையான அணைகளைத் தகர்த்துவிடுகிறது. ஊர்களையே அழித்துவிடுகிறது.

நெருப்பு வன்மையானது. ஆனால் அந்த நெருப்பை மென்மையான நீர் அணைத்துவிடுகிறது. நெருப்பு அழியும். நீர் அழியாது.

காற்று மென்மையானது. ஆனால் அது புயலானால் பெரிய மரங்களைச் சாய்த்துவிடுகிறது.

புயலில் வலிமையான மரம் விழுந்துவிடுகிறது. மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.

பூகம்பத்தில் மனிதன் கட்டும் வலிமையான வீடுகள் உடைந்து போகின்றன. மென்மையான சிலந்தியின் வீடு தப்பித்துவிடுகிறது.



வேர் மென்மையானது. கல் வன்மையானது. ஆனால் வன்மையான கல்லை மென்மையான வேர் பிளந்துவிடுகிறது.

வெப்பம் வன்மையானது. ஒளி மென்மையானது.

ஆனால் வெப்பம் பாயாத தூரத்துக்கு ஒளி பாய்ந்துவிடுகிறது.

வன்மையான பொருள்கள் நுழைய முடியாத இடங்களில் நீர் நுழைந்துவிடுகின்றது.

வன்மையான பொருள்கள் நுழையக் கடினமான உடலில் ‘எக்ஸ்’ கதிர்கள் நுழைந்து விடுகின்றன.

வலிமையானவர்களே போருக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கே அவர்கள் மடிந்து போகிறார்கள்.

மென்மையானவர்கள் தப்பித்துவிடுகிறார்கள்.

பழங்காலத்தில் போர் மூண்டால் ‘முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் பத்திரமான இடங்களுக்குச் சென்றுவிடுங்கள்’ என்று அறிவிப்பார்கள்.

முதியவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அவர்களுடைய மென்மையே காப்பாற்றுகிறது.

வன்மை வன்மையின் மேல்தான் போர் தொடுக்கிறது.

வலிமைதான் பாதுகாக்கும் என்று நினைக்கின்றோம்.

வன்முறையை வாழ்க்கையாகக் கொண்ட ரவுடிகள் வன்முறையாலேயே அழிகிறார்கள்.

வலிமையான ரவுடிகள் சீக்கிரம் செத்துப் போகிறார்கள். மென்மையானவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றார்கள்.

‘வாளை உருவியவன் வாளாலேயே சாவான்’ என்கிறது பைபிள்.

வலிமையே வெல்லும் என்று நினைக்கிறோம்.

ஆனால் ஆங்கிலேயரின் வலிமையான படையை காந்தி அடிகளாரின் அகிம்சை வென்றதை வரலாறு காட்டுகிறது.

கொடியவர்களையும் இசை மென்மையானவர்களாக்கி விடுகிறது.

பாலைப் பண், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும் என்கிறார் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார்.

ஆறலை கள்வர் படை விட, அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை

வன்மையின் வெற்றி அற்பமானது. மென்மையின் வெற்றி நுட்பமானது.

ஆண் வன்மையானவன். பெண் மென்மையானவள்.
இருவரும் மற்போர் புரிந்தால் ஆண் வென்று விடுவான்.
பெண் ஆணை அன்பால் வென்று விடுவாள்.

போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்ற வீரன், பாவையின் பார்வை அம்பு பட்டால் தோற்றுப்போய் அவள் காலடியில் விழுந்துவிடுகின்றான்.

'போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, 'ஓ' என அலறும் ஒரு போர் வீரனைக் காமத்துப் பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

வன்மையின் வெற்றி புறவயமானது. மென்மையின் வெற்றி அகவயமானது. ஆண் புறவயமாகவே பெண்ணை ஆள முடியும். பெண்ணோ ஆணை அகவயமாக ஆள்கிறாள்.

வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும்.

மனங்களைப் பிடிக்க மென்மைதான் உதவும்.

வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கிறது.

மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களில் இடம் கிடைக்கிறது.

வன்மையின் வெற்றிக்கு அற்பாயுசு, மென்மையின் வெற்றிக்கோ தீர்க்காயுசு.

உண்மையில் மென்மையே வன்மை.

**பொருளுணர் திறன் செயற்பாடு**

1. குரு - சீடன் உரையாடல் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?
2. 'மென்மையானது விரைவில் அழிந்துவிடும், வன்மையானது அழியாது' என்ற கூற்றுக்கு முரணாகப் பத்தி எழுத்தாளர் கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.
3. மென்மை குறித்த அப்துல் ரஹ்மானின் நோக்கினை விளக்குக.

**குழுமச் செயற்பாடு**

'தாவரம்' என்ற தலைப்பில் ஐந்து நிமிடத்திற்கு ஏற்ற வகையில் வீதி நாடகம் ஒன்றினை ஆக்கி நடித்துக்காட்டுவோம்.

**திறன் வளர் செயற்பாடு**

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் பத்தி எழுத்து ஒன்றினை ஆக்குவோம்.

★ நட்சத்திரங்கள் ★ சாவிகள் ★ நிறங்கள்